## திராவிட மாடல் அரசு

107

ர.பிரகாசு

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**




# உள்ளாட்சியில் பெண்கள் ஆட்சி!

## பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு!

'ஒரு பெண், குழந்தையாக இருக்கும்போது, தந்தையின் கட்டுப்பாட்டிலும், திருமணம் ஆன பிறகு கணவனின் கட்டுப்பாட்டிலும், கணவன் இறந்த பிறகு மகன் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும்' என்பது மனுதர்மத்தின் விதி (அத்தியாயம்: 5, சுலோகம்: 148). ஆனால், அதற்கு நேர்மாறாக பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும், படிக்கச் செல்ல வேண்டும், வேலைக்குப் போக வேண்டும், பொருளாதாரச் சுதந்திரம் பெற வேண்டுமென்று விடுதலைக் குரலை எழுப்பியது, சுயமரியாதை இயக்கம்.

பேசியதோடு மட்டும் நின்றுவிடவில்லை, கள்ளுக்கடை மறியல் முதல் சட்ட எரிப்புப் போராட்டம் வரை அனைத்து முக்கிய போராட்டக் களங்களிலும் பெண்களை அதிகளவில் பங்கெடுக்கச் செய்தார் பெரியார். அவர் வழியில் பயணித்த அண்ணாவும், 'மும்முனைப் போராட்டம்', 'குலக்கல்விக்கு எதிரான போராட்டம்', 'விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டம்' எனப் பல போராட்டக்களங்களில் பெண்களை நிரப்பியிருந்தார்.

கல்வி- வேலைவாய்ப்புக்கு மட்டுமின்றி, அரசியல் அதிகாரத்திலும் பெண்களைப் பங்கெடுக்கச் செய்வதற்கான விதைகளாக இவை அமைந்தன. அந்த வழிதவறாத பாதையில் பயணித்ததால்தான், உயர்கல்வி நிறுவனங்களில் ஆண்களுக்கு நிகராய் பெண்களும் பணியில் அமர்ந்திருப்பதைப் போல, உள்ளாட்சி மன்றங்களிலும் ஆணுக்கு சரிநிகராய் பெண்ணையும் பங்கெடுக்கச் செய்திருக்கிறது 'திராவிட மாடல் அரசு'

### உள்ளாட்சிப் பணிகள்!

அரசாங்கத்தின் அதிகார மட்டங்களில், மற்றெந்த அரசையும் விட, மக்களோடு நேரடிப் பிணைப்பைக் கூடுதலாகக் கொண்டிருப்பது உள்ளாட்சி மன்றங்கள். பொது சுகாதாரம், குடிநீர் வழங்கல், தூய்மைப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, தெரு விளக்குகள் அமைத்தல், கல்வி மேம்பாடு, மயானங்களைப் பராமரித்தல், சாலை வசதிகள் ஏற்படுத்துதல், மாநில- ஒன்றிய அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல் என பொதுமக்களின் அனைத்து தேவைகளுக்குமான தீர்வை வழங்குபவை உள்ளாட்சி அமைப்புகள். ஆனால், உள்ளாட்சி மன்றங்கள் 90-களின் இறுதிவரை 'ஆண்களாட்சி' மன்றங்களாகவே திகழ்ந்தன.

முத்தமிழறிஞர் கலைஞரின் ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேளாண் வளர்ச்சி, கட்டமைப்புகள் மேம்பாடு என ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கவனம் செலுத்தியதைப் போல, பெண்கள் வளர்ச்சியிலும் பெரும் கவனம் செலுத்தினார். பள்ளிக்கூடங்களை நோக்கிப் பெண்களை இழுக்க, 'மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் திருமண நிதி உதவித் திட்ட'த்தைத் தந்தார். பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என சட்டம் நிறுவினார்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு வழங்கினார். பெண் காவலர்களை நியமித்தார். மகளிர் சுய உதவிக்குழுக்களைத் தோற்றுவித்தார். அந்த வரிசையில், பெண்களை அதிகார மய்யத்தில் அமரவைத்து, அழகு பார்க்க கலைஞர் உருவாக்கிய திட்டம்தான் 'உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு'.

### தேர்தல் வாக்குறுதி!

உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் 1990-ஆம் ஆண்டு இறுதியில், தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பின்னர், ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதன் பின்னர், நடைபெற்ற ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. மீண்டும் 1996-ஆம் ஆண்டு, தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியும் ஒன்று. அதன்படி கழக அரசு அமைந்ததும் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டது.

பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டையும் அந்தத் தேர்தலில் உறுதி செய்தார் கலைஞர். அதன்காரணமாக, அத்தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகிகளாக உருவெடுத்தனர். பெண்களை அரசியல்படுத்தும் பயணத்தில் பெரும் மைல்கல்லாக அமைந்தது இம்முயற்சி.



**பெண்கள் உரிமைசார்ந்த திட்டங்கள் எதுவாயினும், அதை தமிழ்நாடு நிறைவேற்றிய பல பத்தாண்டுகளுக்குப் பிறகே ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தியது என்பது கடந்தகால வரலாறு.**

### 50%-ஆக உயர்த்திய நம் அரசு

கிராமப்புறங்களில் இருக்கும் பெண்களை, நகரங்களை நோக்கி வரச்செய்த மகளிர் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம், பொருளாதார சுதந்திரத்தின் வலிமையை உணரச் செய்யும் விதமாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம், பள்ளிக்கல்வியில் இருந்து பெண்களை உயர்கல்வி நோக்கி இழுக்க புதுமைப்பெண் திட்டம், அரசுப் பணிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 40%-ஆக உயர்வு என 2021-இல் தி.மு.க. அரசு அமைந்தது முதலே, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் பெண்கள் மேம்பாட்டிற்கான- சுதந்திரத்திற்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டியுள்ளார் 'திராவிட மாடல் நாயகர்' முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இந்த வரிசையில்தான் 2022 பிப்ரவரியில் நகரப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை தி.மு.க. அரசு நடத்தியபோது, அதில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியது. மொத்தம் 12,800 பதவிகளுக்கு நடைபெற்ற இத்தேர்தலில் சுமார் 6,500 பேர் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

### மாமன்றங்களில் மகளிர் ஆட்சி!

நகர்ப்புற அமைப்புகளுக்கான பிரநிதிகளில் சரிபாதிக்கும் சற்று அதிகமானோர் பெண்கள் என்பதால், தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகளில் 11 மாநகராட்சிகளில் பெண் மேயர்கள். சென்னை, கோவை, மதுரை, ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய பெரு நகரங்களிலும் பெண்களே மேயர்களாக உள்ளனர். இதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 139 நகர் மன்றத் தலைவர்களில் 69 பேர் பெண்கள். 489 பேரூராட்சி மன்றங்களில் 245 பேரூராட்சிகளுக்குப் பெண்களே தலைவர்களாக உள்ளனர். துணைத் தலைவர்களிலும் பெண்கள் பரவலாக உள்ளனர்.

### அதிகாரம் பெறட்டும் பெண்கள்!

உள்ளாட்சிகளில் இடஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருப்பதைப் போல, சட்டமன்றங்கள்-நாடாளுமன்றங்களுக்கான இடஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஒன்றிய அரசு கொண்டிருக்கிறது. உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டை வழங்கியதைப் போல, சட்டமன்றங்களிலும்- நாடாளுமன்றத்திலும் 50% இடஒதுக்கீட்டை வழங்கிட வேண்டியது ஒன்றிய அரசின் கடமை. பெண்கள் உரிமைசார்ந்த திட்டங்கள் எதுவாயினும், அதை தமிழ்நாடு நிறைவேற்றிய பல பத்தாண்டுகளுக்குப் பிறகே ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தியது என்பது கடந்தகால வரலாறு. பெண்களுக்கு அரசியல் அதிகாரமளிக்கும் இம்முடிவுக்கும் இன்னும் பல பத்தாண்டுகள் காத்திருக்க வேண்டுமா? உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே கழகம் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

ஏனென்றால், இலக்கு தனித்தனி திட்டங்கள் அல்ல! திராவிட சித்தாந்தத்தின் இதயத்தில் ஒன்றிப்போயிருக்கும் சமூக விடுதலை - சுதந்திரம் - சுயமரியாதை!

**...சாதனை தொடரும்**

## வெளியுறவு அமைச்சகத்தின் மௌனம்!

அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இந்தியர்கள் கை, கால்களில் விலங்கிடப்பட்டு, சமீபத்தில் அனுப்பப்பட்டனர். அவர்களை அனுப்புவதற்கு முன், அந்த நடைமுறைகள் அனைத்தும் இந்திய அரசுக்கு தெரிந்திருந்தும், இந்திய வெளியுறவுத்துறை அதில் அக்கறை காட்டவில்லை என்கிற குற்றச்சாட்டுகளை, எதிர்க்கட்சிகள் முன்வைத்து வருகின்றன. இது தொடர்பாக, சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர்களை வெளியேற்றுவதில் சவுதி அரேபியா பின்பற்றும் நடைமுறைகளை ஒப்பிட்டு, அங்கு பணியாற்றும் அருள்ராஜ் என்பவரின் முகநூல் பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

"முறையான ஆவணங்கள் இல்லாமல் இருப்பவர்களை அடையாளம் கண்டு, நாடு கடத்துவதற்காக இயங்கும் சிறைகளிலோ அல்லது முகாம்களிலோ அவர்களை அடைத்திருப்பார்கள். அவர்களில், ஒரிஜினல் பாஸ்போர்ட் இல்லாத அனைவருக்கும், இந்திய தூதரகத்தின் மூலம் எமர்ஜென்சி பாஸ்போர்ட் வழங்கப்பட்டிருக்கும்.

பாஸ்போர்ட் விவரங்களின் அடிப்படையில், இவர்கள் அனைவரின் கைரேகை அல்லது கண் கருவிழிப்படலம் பதிவேற்றப்பட்டு, அமெரிக்காவின் கருப்புப் பட்டியலில் சேர்த்திருப்பார்கள். பயணியர் விமானத்தின் மூலமாக அல்லாமல் சிறப்பு இராணுவ விமானம் மூலம் அனுப்பப்படுவதால், இந்த 103 நபர்களின் முழு விவரங்களும் அமெரிக்காவில் இயங்கும் இந்திய தூதரகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும். அதனடிப்படையில், இந்தியாவின் எந்த விமானநிலையத்தில், அந்த விமானத்தை இறக்குவது என்று முடிவு செய்வதற்காக, டெல்லியில் இயங்கும் வெளியுறவுத்துறை அலுவலகத்திற்குக் கோரிக்கை வந்திருக்கும்.

டெல்லி அதிகாரமையம் முடிவெடுத்து, இந்தியாவின் பஞ்சாப் அமிர்தசரஸ் விமான நிலையத்தைக் கைகாட்டியிருக்கும். அதன்பிறகுதான், அந்த விமானம் அமெரிக்காவிலிருந்தே புறப்பட்டிருக்கும். இந்தத் தகவல்கள் எல்லாமே இந்திய வெளியுறவுத் துறைக்கும், இந்திய தூதரகத்திற்கும் தெரிந்துதான் நடந்தாகவேண்டும். இவ்வளவும் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தபிறகும், இந்திய வெளியுறவுத் துறையோ, இந்தியத் தூதரகமோ இதுபற்றி மூச்சுகூட விடவில்லை. அமெரிக்க அதிகாரி ஒருவர்தான் 204 இந்தியர்களை, இராணுவ விமானத்தில் நாடு கடத்தியிருப்பதாக டிவிட்டரில் பதிவு செய்தார். அதன்பிறகுதான், இந்த விஷயமே வெளியில் தெரிந்தது. அவர் சொன்ன 204 என்ற எண்ணிக்கை இந்தியாவில் எப்படி 103 ஆனது என்பது புதிராக உள்ளது" என்று பதிவிட்டுள்ளார். இவ்வளவுக்கு பிறகும் வெளியுறவு அமைச்சகம் மௌனமாகத்தான் உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்




### தலைநகரில், தமிழனின் குரல்!



'முகில்' ராஜேந்திரன்

7/7/2006 அன்று திருச்சியில் அண்ணன் திருச்சி சிவா அவர்கள் எழுதிய 'தலைநகரில் தமிழனின் குரல்' என்ற புத்தக வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புத்தகத்தை வெளியிட்டு உரையாற்றினார். அவரிடம் நான் நூலை பெற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. அருகே மாண்புமிகு அமைச்சர் அண்ணன் கே.என். நேரு அவர்கள்.

**- 'முகில்' ராஜேந்திரன், ஒன்றிய கழக முன்னாள் செயலாளர், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### அண்ணா முதல்வர்!

1967-இல் தி.மு.கழகம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன், சென்னை, ராஜாஜி மன்றத்தில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றத் தலைவராக, அண்ணாவின் பெயரை நாவலர் நெடுஞ்செழியன் முன்மொழிய, முத்தமிழறிஞர் கலைஞர் வழிமொழிந்தார். அதன்பிறகு, அண்ணா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட அமைச்சரவை பொறுப்பேற்றது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

745

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.